

மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா நடிகர் போஸ் வெங்கட் இல்லத்திற்கு சென்று அவரது சகோதரர், சகோதரி மறைவு குறித்து ஆறுதல் கூறினார்.

ஒன்றிய - மாநில பா.ஜ.க. அரசுகளின் கொடுங்கோன்மையால் மணிப்பூரில் மனிதப் படுகொலைகள்!

# கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கம் சார்பில் இன்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## இனிகோ இருதயராஜ் தலைமை! ஆ.இராசா எம்.பி. - சா.பீட்டர் அல்போன்ஸ் பங்கேற்பு!

சென்னை, ஜூன் 26-

ஒன்றிய மற்றும் மாநில பா.ஜ.க. அரசுகளின் செயலிழந்த நிர்வாகத்தின் காரணமாக மணிப்பூர் மாநிலத்தில் நடக்கும் மனித படுகொலைகளை கண்டித்து அனைத்துக் கட்சியினரையும் பல்வேறு மத அமைப்புகளையும் ஒருங்கிணைத்து கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கம் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று (26.6.2023-திங்கள் கிழமை) மாலை 4 மணி முதல் நடைபெறுகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கத் தலைவர் இனிகோ இருதயராஜ் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், சசிகாந்த் செந்தில், ஐ.ஏ.எஸ்., வி.சின்னதுரை எம்.எல்.ஏ., இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி எஸ். எஸ்.பாலாஜி எம்.எல்.ஏ., ம.தி.மு.க. முதன்மைச் செயலாளர் துரை.வைகோ, மனித நேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ., கே. நவாஸ்கனி எம்.பி., டி.வேல்முருகன் எம்.எல்.ஏ., இ.ஆசீர், டாக்டர் அ.நீதிநாதன், முனைவர் ஜே.ஜார்ஜ் ஸ்டீபன், செபாஷ்டின் பொலொளிப்பரம்பில், கே.பி.எடிசன், டாக்டர் ஏ.எம்.சின்னப்பா, எம்.ஜி. பகத்சிங், ஜெபமாலை ராஜா, டாக்டர்.இருதயம், ரேன்சம், ஆண்டனி ஜெரால்டு, எல்.அருள்சீலி உள்பட பலரும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு பேசுகின்றனர்.

இந்தியாவின் மக்களாட்சியைக் காப்பாற்ற வேண்டுமானால் -

# பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடாது என்பதே - எதிர்க்கட்சித் தலைவர்களின் கூட்டம்!

## 'தினகரன்' நாளேடு தலையங்கம்!

சென்னை, ஜூன் 26-

இந்தியாவின் மக்களாட்சியை, மதச்சார்பின்மையை ஏழை எளிய மக்களைக் காப்பாற்ற வேண்டுமானால் பாரதிய ஜனதா மீண்டும் ஆட்சிக்கு வரக் கூடாது என்பதே பாட்னாவில் நடைபெற்ற எதிர்க்கட்சித் தலைவர்களின் கூட்டம் என்று 'தினகரன்' நாளேடு 25.6.2023 நாளன்று தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அத்தலையங்கம் வருமாறு :

பிரதமர் மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க. அரசின் பதவிக்காலம் அடுத்த ஆண்டு நிறைவு பெறுகிறது. இதையடுத்து புதிய அரசு அமைவதற்கான நாடாளுமன்றத் தேர்தல் வரவுள்ளது. இந்த தேர்தலிலும் எப்படியாவது வெற்றி பெற்று ஆட்சியை தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பதில் பா.ஜ.க.வின் முன்னணி தலைவர்கள் குறியாக உள்ளனர்.




தேச ஒற்றுமை என்ற பெயரில் ஒரே நாடுஒரே கார்டு, ஒரே நாடு ஒரே தேர்தல், பொதுசிவில் சட்டம் என்று அவர்கள் ஏவும் அஸ்திரங்கள் அனைத்தி லும் அபத்தங்களே பிரதானங்கள்.

இதேபோல் தங்களுக்கு ஆட்சி வசப்படாத மாநிலங்களில் அதிகார அத்துமீறல்களைக் கையாள்வதும், ஆளுநர்களைப் பயன்படுத்தி குழப்ப ங்களை விளைவிப்பது ம் தொடர்கதையாகி வருகிறது.

இ ப் ப டி ப் பட்ட நிலையில் 'வேற்றுமையில் ஒற்றுமை' என்ற இந்தியாவின் பன்முகத்தன்மையை சிதைத்து விடக்கூடாது, மதங்களை கடந்து மனங்களை நேசிக்கும் பண்பாடு என்றென்றும் தொடர வேண்டும், இதற்காக வரப்போகும் நாடாளுமன்றத் தேர்தலில் பாஜ.க.வை எதிர்த்து வலுவான கூட்டணி களம் காண வேண்டும் என்பது கோடிக்கணக்கான மக்களின் எண்ணம். தற்போது இதற்கான முன்னெடுப்பு களை எதிர்க்கட்சிகள் மேற்கொண்டு, ஒற்றுமையுடன் கரங்களை உயர்த்தியுள்ளன. இது பா.ஜ.க. தலைவர்கள் வயிற்றில் புளியை கரைத்துள்ளது என்றால் அது மிகையல்ல. சமீபத்தில் பாட்னாவில் அனைத்து எதிர்க்கட்சி தலைவர்களின் கூட்டம் நடந்தது.

பீகார் முதல்வர் நிதிஷ்குமார் இல்லத்தில் நடந்த இந்த கூட்டத்தில் அகில இந்திய காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, தற்போதைய தலைவர் மல்லிகார்ஜுனா கார்கே, தமிழ்நாட்டின் முதல்வர் மு.க.ஸ்டாலின், மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார், சுப்ரியாசுலே, ராஷ்டிரிய ஜனதாதள தலைவர்கள் லல்லுபி ரசாத்யாதவ், தேஜஸ்வி யாதவ், ஆம் ஆத்மி சார்பில் டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால், பகவந்த்மான், சஞ்சய் சிங், சிவசேனா கட்சியின் தலைவர் உத்தவ்தாக்கரே, சமாஜ்வாடி கட்சியின் தலைவர் அகிலேஷ்யாதவ், ஜார்கண்ட் முதல்வர் ஹேமந்த்சோரன், தேசியமாநாட்டு கட்சியின் தலைவர் உமர்அப்துல்லா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் சீதாராம் யெச்சூரி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் டி.ராஜா, மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் சார்பில் தீபங்கர்பட்டாச்சா ர்யா ஆகியோரும் பங்கேற்றனர்.

இந்த வகையில் சிறப்பான கொள்கைகள் கொண்ட கட்சிகளின் தலைவர்களும், ஆகச்சிறந்த ஆளுமைகளும் ஓரணியில் ஒற்றுமையுடன் திரண்டுள்ள னர். இவர்களின் இனம் வேறு, மொழி வேறு, மதம் வேறு. ஆனாலும் அனைவரது குரலும் ஓங்கி ஒலித்திருப்பது சமூக நீதிக்காக. இந்த சமூகநீதி சக்கரத்தைப் பொருத்தி சுழலும் ஆட்சியே, இந்தியாவின் பன்முகத்தன்மையை சிதைக்கா மல் காத்து நிற்கும். இதற்கான ஜனநாயக மலர்களை வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மலரச் செய்வதே இவர்களின் இலக்கு.

இதற்கான விதையை பாட்னாவில் ஊன்றி இருக்கிறது பண்பட்ட தலைவர்களின் ஒன்றிணைந்த கரங்கள். இந்தியாவின் ஜனநாயகத்தை, மக்களாட்சியை, மதச்சார்பின்மையை, பன்முகத்தன்மையை, ஒடுக்கப்பட்ட மக்களை, ஏழை எளிய மக்களைக் காப்பாற்ற வேண்டுமானால் பாரதிய ஜனதா மீண்டும் ஒரு முறை ஆட்சிக்கு வரக்கூடாது என்பதில் அனைத்துக் கட்சிகளும் மிகத்தெளிவாக இருக்கிறோம் என்று இதனை அற்புதமாக கோடிட்டு காட்டியுள்ளது பெருமைமிகு தமிழ்நாட்டு முதல்வரின் கருத்து. ஜூலை12ல் நடக்கும் அடுத்த கூட்டம், இந்த விதைக்கு மேலும் வலுவூட்டும் என்பது நிதர்சனம்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

## வாட்ஸ்அப்பில் வந்தது!






வேளச்சேரி மேற்கு பகுதி தி.மு.க. ஏற்பாட்டில் பகுதி செயலாளர் அரிமா சு.சேகர் தலைமையில் நடைபெற்ற, முத்தமிழறிஞரின் புகழ் ஓங்கி இருப்பது எழுத்தாற்றலிலா ? சொல்லாற்றலிலா? எனும் பட்டிமன்றத்தில் பட்டிமன்ற நடுவர் புலவர் ராமலிங்கம் சிறப்புரையாற்றினார். இதில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி , எம்.எல்.ஏ.க்கள் காரம்பாக்கம் கணபதி, பிரபாகர் ராஜா, அசன் மௌலானா, பகுதிச் செயலாளர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைகபிலன், கண்ணன், மு.ராஜா, மாவட்ட அவைத் தலைவர் குணசேகரன், மாவட்ட துணைச் செயலாளர் பாலவாக்கம் மனோகரன், பட்டிமன்ற பேச்சாளர்கள் திமிரி சதாசிவம், பேரா.நாகை வேம்பு பாலா, முனைவர். நவஜோதி, பேரா.வேதநாயகி, மாவட்ட, பகுதி கழக நிர்வாகிகள், கவுன்சிலர்கள், வட்டச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னணியினர், வட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

# திருச்சி அருகே சாலை விபத்து: 5 பேர் பலி!

திருச்சி, ஜூன் 26-

திருச்சியில் இருந்து திண்டுக்கல் நோக்கி அரசு பஸ் சென்று கொண்டிருந்தது. மணப்பாறை அருகே கல்கொத்தனூர் என்ற பகுதியில் சென்றபோது சாலையில் எதிரே வேகமாக வந்த கார் அரசு பஸ் மோதியது.

இந்த கோர விபத்தில் சம்பவ இடத்திலேயே 5 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். உயிரிழந்த அனைவரும் காரில் பயணித்தவர்கள் என்று முதற்கட்ட தகவல் வெளியாகியுள்ளது.

இந்த விபத்தில் 20 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். தகவலறிந்த போலீசார் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். விபத்துக்கான காரணம் குறித்து போலீசார் விசாரித்து வருகின்றனர்.

## தாம்பரத்தில் மாணவர்களுக்கு நிதி உதவி!

தாம்பரம், ஜூன் 26 -

தாம்பரம் மாநகர திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் ச.இராஜேஷ் அவர்களின் ஏற்பாட்டில் சுப்புலட்சுமி சர்தார் அறக்கட்டளையின் சார்பில் நலிந்த 20 பள்ளி மாணவியர்களுக்கு தலா 5000 ருபாய் விதம் மொத்தம் 1 லட்சம் ரூபாய் நிதி உதவியை மாணவ மாணவியர்களுக்கு தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ் ஆர் ராஜா எம் எல் ஏ வழங்கினார். இந்நிகழ்ச்சியில் டி காமராஜ், எஸ்.ஜி. கருணாகரன், கி.வேல்மணி, மங்களபுரம் எம் பாபு, சீ.செழியன் , ராஜேஷ்,எஸ் ரமேஷ், பிரதாப், மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# சமூக நீதிக்காக அச்சமின்றிப் போராடிய வி.பி.சிங்கிற்கு வீரவணக்கம் செலுத்துவோம்!



**இன்று ஜூன் 25,**


இந்தியாவின் சமூகநீதிக் காவலர், முன்னாள் பிரதமர் வி.பி.சிங்.அவர்களின் பிறந்த நாள்.

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினரை, கல்வியிலும், பொருளாதாரத்திலும் முன்னேற்ற வேண்டும் என்பதில், இறுதிவரை உறுதியாக இருந்த அந்த உண்மையான புரட்சித் தலைவருக்கு வீரவணக்கம் செலுத்துவோம்.

இந்தியத் துணைக் கண்டத்தில் அவர் சமூக நீதிக்காக அச்சமின்றிப் போராடினார், இடஒதுக்கீடு நமது உரிமை என்பதை வலியுறுத்த அனைவரையும் தைரியப்படுத்தினார்.

வி.பி.சிங். - நம் தமிழினத் தலைவர் கலைஞர் ஆகிய இரு பெருந் தலைவர்களின் சிந்தனையும், ஒத்திசைவுடன் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்திருந்தது. ஏனெனில் இவர்கள் அனைத்து சமூகத்திற்கும் அதிகாரம் அளிக்கும் பொதுவான இலக்கைப் பகிர்ந்து கொண்டார்கள். இவர்களது எண்ணங்கள் ஒளிமயமான மற்றும் சமத்துவமான எதிர்காலத்தை நோக்கி நம்மை வழிநடத்தும்.



கலைஞர் 100 1924 - 2023



"மொழிக்காகப் பாடுபட்ட பெரியவர் ம.பொ.சி அவர்கள்"
-முத்தமிழறிஞர் கலைஞர்

சிலம்புச்செல்வர்
ம.பொ.சிவஞானம் அவர்களின்
118ஆவது பிறந்த நாள்

தமிழ்நாடு அரசின் சார்பில்
சிலம்புச்செல்வர் ம.பொ.சிவஞானம் அவர்களின்
திருவுருவச் சிலைக்கு
மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,
துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,
சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.



நாள்: 26.6.2023, திங்கட்கிழமை, காலை 10.00 மணி
இடம்: தியாகராய சாலை, சென்னை-600 017

இயக்குநர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-600 009

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

செ.ம.தொ.இ./712/வரைகலை/2023